Regd. No. M. 4593. 'KUDI ARASU' 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை: அ. 0-1-0

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 18 } சனி, 1-9-1945 ஆவணி-மீ 16உ { மலர் 47

# ஆரியர் வருகை

## பூர்வீக குடிகளும் வர்ணபேத ஆரம்பமும்

★

*திராவிடர் கழகத் தலைவர் கூறுவதன்று. ஆனால் பத்தாண்டுகட்கு முன்னர் ஆரியராகிய தோழர் மக்ருத் ஹாசின் சதுர்வேதி என்பவர் "லைட்" என்ற ஆங்கிலப்பத்திரிகையில் எழுதியதன் மொழிபெயர்ப்பு. இது ஏற்கனவே "குடி அரசு" மாலை 11-ல் வெளியாகியுள்ளது.*

"டாக்டர் அம்பேத்காரும், மற்றும் இன்று தீண்டப்படாதவர், சூத்திரர் என்றழைக்கப்படுவோரும் இந்தியப் பூர்வகுடிகளின் சந்ததிகளே. ஆதிகாலத்திலே அந்தப் பூர்வ குடி மக்களே நாட்டுக்கு அதிபதிகளாக சுதந்தர வாழ்வு நடத்தினார்கள். அவ்வாறு வளங்காகுடியாய் வாழ்ந்து வந்த இந்தியப் பூர்வகுடி மக்கள் பிற்காலத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த ஒரு கூட்டத்தாருக்கு அடிமைப்பட்டு, மானமிழந்து அல்லல் அனுபவிக்கும் இது போன்ற சம்பவத்தை உலக சரித்திரத்திலேயே காணமுடியாது.

ஆரியர்கள் காஸ்பியன் கடலுக்கும் பக்கத்திலுள்ள வடமேற்குப் பிரதேசங்களிலிருந்து இந்தியாவில் புகுந்ததாகப் பெரும்பாலான பண்டிதர்கள் கூறுகிறார்கள். வேத ஆராய்ச்சிகளில் சிறந்தவரான பாலகங்காதர திலகர் வடதுருவப் பிரதேசமான ஆர்க்டிக் மகா சமுத்திரத்தை அடுத்த ஒரு நாட்டிலிருந்து ஆரியர்கள் ஐரோப்பா முழுவதும் பரவி கடைசியில் இந்தியாவுக்கு வந்ததாகக் கூறுகிறார். ஆரியர்கள் எங்கிருந்து வந்தாலும் சரி, அவர்கள் இந்தியாவுக்கு வந்து பூர்வகுடிகளைக் கொடுமைப்படுத்தி அடிமை கொண்டுவிட்டார்கள் என்பதுமட்டும் உண்மை. சுதந்திரமிழந்த ஆதி இந்தியர்கள் ஆரியர்களுக்கு அடிமைகளாக இருக்க விரும்பவில்லை. எனவே அவர்கள் வனங்களிலும், மலைப்பிரதேசங்களிலும் குடி புகுந்து வாழத் தொடங்கினர். அவ்வாறு சென்றவர்களுக்கு ஆரியர்கள் ராட்சஸர் என்று பெயர் சூட்டினர்.

குடிபுகுந்த ஆரியர்கள் பூர்வ குடிகளைவிட அழகிய வெள்ளை நிறமுடையவர்களாயிருந்தார்கள். எனவே வெள்ளையர்களான ஆரியர், கறுப்பர்களான ஆதி இந்தியர்களைவிட உயர்ந்தவர்கள் என ஒரு ஜாதிகள் ஏற்பட்டது. அன்று முதற்கொண்டே வர்ணபேதக் கொடுமை ஆரம்பமாயிற்று. வர்ணபேதக் கொடுமையினால் இந்தியாவைப் போல் கஷ்டப்படும் நாடு உலகத்திலேயே வேறு இல்லை என்றே சொல்லலாம். ஆரியர்கள் ஆதி இந்தியர்களைச் சந்தித்த போதே அவர்களுக்குக் "கறுப்பர்கள்" என்ற இழிபெயரைச் சூட்டினர். போர்க் கடவுளான இந்திரனை ஒரு ஆரிய வீரன் பாராட்டிப் புகழ்வதைக் காண்க: "ஆரியர் சட்டத்துக்குக் கீழ்ப்படியாதவர்களைத் தண்டித்துக் கறுப்பர்களை மனுவுக்கு அடிமைப்படுத்தி மற்றும் நூற்றுக்கணக்கான உதவிகள் புரிந்த இந்திரன் செய்யும் (பல) ஆரியர்களைக் காப்பாற்றினான்." (ரிக்வேதம் முதல் மண்டலம், 30-வது மந்திரம், 8-வது ஸ்லோகம்.)

ஆரியர்களுக்கும் ஆதி இந்தியர்களுக்கும் நடைபெற்ற போரைப் பற்றியும், ஆரியர் செய்த பற்பல கொடுமைகளைப்பற்றியும், வேதங்களில் பல குறிப்புகள் காணக்கிடக்கின்றன. வெள்ளை ஆரியர்கள் கறுப்புப் பூர்வகுடிகளை எவ்வளவு குரூரமாக இம்சித்தார்கள் என்பதைக் கீழ்வரும் உதாரணங்களால் ஒருவாறு யூகித்துக்கொள்ளலாம்.

I

ஓ உலகம் போற்றும் இந்திரனே! ஸாஷ்ருவனை எதிர்த்த இருபது கறுப்பு அரசர்களையும் அவர்களது அறுபதினாயிரத்துத் தொண்ணூற்றொன்பது படைகளையும் நீ உன் தேர்ச் சக்கரத்துக்கு இரையாக்கி நசுக்கிக் கொன்று ஆரியர்களுக்கு உதவி புரிந்தாய். (ரிக்வேதம் மண்டலம் I மந்திரம் 53. ஸ்லோகம் 9; அதர்வணவேதம் மண்டலம் XX மந்திரம் 21, ஸ்லோகம் 9.)

II

ஓ இந்திரனே! பிப்ரு, மிருகய அசுர அரசர்களை ஆரிய மன்னனான விதாதின் புத்திரன் ரிஜிஷ்வனுக்கு அடிமைப்படுத்தினாய்! ஐம்பதாயிரம் கறுப்புப் படைகளை ஜெயித்தாய். முதுமை உயிரை மாய்ப்பதுபோல் அனேக கோட்டைகளையும் பாழாக்கினாய்!

(ரிக்வேதம் மண்டலம் IV மந்திரம் 16 ஸ்லோகம் 13)

III

ஆரிய அரசன் தாஸிதியின் நன்மைக்காக முப்பதாயிரம் தாசர்களை உன் மந்திர சக்தியினால், ஓ இந்திரனே! மரணத்துக்கு அனுப்பினாய்!

(ரிக்வேதம் மண்டலம் IV மந்திரம் 3 ஸ்லோகம் 21)

IV

"ஓ தீரனான இந்திரனே! உன் வலை பிரம்மாண்டமானது; மஹா வலாட்டியமானது; ஆயிரக்கணக்கானவர்களைச் சிக்கவைக்கும் ஆற்றலுடையது; ஐந்து, பத்து, நூறு, ஆயிரமாகப் பெருகும் சக்தியுடையது. அந்தவலைய வலையில் நாசம் விளைவைச் சிக்கவைத்து நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கானவர்களைக் கொன்றாயே!

(அதர்வண வேதம் காண்டம் VIII மந்திரம் 8 ஸ்லோகம் 7.)

மேலே கூறிய உதாரணங்களால் ஆதி இந்தியர்கள் லட்சக்கணக்காகக் கொல்லப்பட்டதையும் சித்திரவதை செய்யப்பட்டதையும் அறிந்து அதிர்ந்துகொள்ளலாம். வெளி எஞ்சிய ஆதி இந்தியர்கள் மீது ஆரியர்கள் கொண்டிருந்த வெறுப்பும் வஞ்சமும் அம்மா! பெரிது!! பெரிது!!!

கீழ் வருவன ரிக்வேதம் VII வது மண்டலம் 104வது மந்திரத்திலும், அதர்வண வேதம் காண்டம் VIII, 4வது ஸ்லோகத்திலும் காணப்படுகின்றன.

ஸ்லோகம் 1.

ஓ இந்திரனே! ஸோமனே! ராக்ஷசர்களை எரி! எரி!! நசுக்கு! நசுக்கு!! இருண்ட வனாந்திரங்களில் ஒன்று பத்து நூறாகப் பெருகிவரும் அந்த அசுரக்கூட்டங்களை அடக்கு! அடக்கு!! பின்னா பின்னப்படுத்து; மடையர்களை அக்கினிச்சுவாலையால் சுட்டுக் கொல்லுக! சித்திரவதை செய்! நாசமாகச் ஒழித்தெறி! துண்டுதுண்டாக வெட்டு!

ஸ்லோகம் 2.

ஓ இந்திரனே! ஸோமனே! அந்த அசுரக் கூட்டத்தை, துரோகிகளை, தீமையே உருவானவர்களை அக்கினிக் குண்டத்தில் வைத்து நீர்ப் பானையின் மேல் வைத்து வேக அவித்துக்கொல்! பிராமண துரோகிகளான அந்தப் பச்சை மாமிசம் தின்னும் அரக்கர்களை மீளா நரகத்தில் தள்ளி ஹிம்சிப்பாயாக!

ஸ்லோகம் 3.

குகைகளிலும் வனாந்திரங்களிலும் பதுங்கிக் கிடக்கும் அந்தச் சண்டாளர்களைக் கீறி, பிளந்து, அரிந்து, சித்திரவதை செய்! இருண்ட காடுகளில் மறைந்துகிடக்கும் அவர்களுக்கு ஒரு உதவியும் செய்யாதே! அந்த வனாந்திரங்களிலும் அவர்கள் மீளாமல் போவார்களாக! உங்கள் பயங்கர மந்திரம் அவர்களை அடக்கி ஒடுக்குவீர்களாக!

ஸ்லோகம் 4.

ஓ இந்திரனே! ஓ ஸோமனே! வான மண்டலத்திலிருந்து கொடிய ஆயுதங்களைக் கீழே சொரிவீர்களாக! பூமியிலிருந்து ஆயிரக்கணக்கான ஆயுதங்கள் கிளம்புமாறு கருணை புரிவீர்களாக! பிரதினமும் பெருகி வரும் ராக்ஷசக் கூட்டங்களை எதிர்ப்பதற்காக மலைகளிலிருந்து லக்ஷக்கணக்கான அக்கினியாஸ்திரங்கள் தோன்றும்படி அருள்புரிவீர்களாக!

ஸ்லோகம் 11.

அசுரர்கள் ஒழிக! பின்னர் குட்டிகள் நசிக்க! சிற்சில சந்ததிகள் அழிக! பூமிதேவி அசுரக்கூட்டங்களை விழுங்கிவிடட்டும்! இரவு மகளும் அவர்களை ஹிம்சிக்க! அசுரக்கூட்டம் நாசமாகட்டும்.

ஸ்லோகம் 27.

பகற்காலங்களில் ஒளிந்துகொண்டு இராக்காலங்களில் பிசாசு போல் நடமாடும் அவள் (அதுகால் இவள் ஒரு ஆதி இந்திய அரசியாக இருக்கலாம்.) அழிக! படுபாதாளத்தில் விழுந்து மடிக! கோரமான மலைகள் பெயர்ந்து அசுரக்கூட்டங்களை விழுங்குக!

ஸ்லோகம் 24.

ஓ! இந்திரனே! மந்திர தந்திரங்களில் தேர்ந்தவர்களான யதுதனர்கள் பெண்டுபிள்ளைகளுடன் அழிந்தொழியக்கடவர்! அன்னத் தெய்வங்களை வணங்கும் கொடியவர்கள் மாளுமாறுபோக! சூரியன் மேலெழுச்செல்வதை அவர்கள் காணாது போகக்கடவர்.

கீழ் வருவன ரிக்வேதத்திலும் அதர்வண வேதத்திலும் காணப்படுகின்றன. அவற்றின் வரிசைக் கிரமத்தில் சட்டும் சில மாற்றங்கள் இருக்கின்றன.

ஸ்லோகம் 2.

ஞானஸ்வரூபியான அக்கினி தேவனே! உன் சுவாலைக் கரங்களை விரித்து யதுதனர்களை எரிப்பாயாக! அன்னத்தெய்வங்களை வணங்குவோரை உன் நாவால் பிடித்து விழுங்குவாயாக! பச்சை மாமிசம் தின்னும் அரக்கர்களை விழுங்குவாயாக!

ஸ்லோகம் 4.

ஓ அக்கினித்தேவனே! யதுதனர்களின் தோலைக் கிழிப்பாயாக! இடிவிழுந்து அவர்கள் சாம்பலாகட்டும்! அவர்களுடைய மணிக்கட்டுகளை முறித்துவிடு! மாமிசம் தின்னும் அந்தக் காட்டுமிருகங்கள் நாசமாகட்டும்.

ஸ்லோகம் 10.

ஓ அக்கினி தேவனே! இங்கிருந்து பொதுஜனங்களில் அரக்கராயிருப்பவர்களைத் தேடிப் பிடிப்பாயாக! அவர்களுடைய முழங்கால்களையும், முழங்கைகளையும், கழுத்துகளையும் முறிப்பாயாக! அவர்களது விலாவெலும்புகளை எரிப்பாயாக! யதுதனக் கூட்டத்தை ஆணிவேர் அறும்படி அழிப்பாயாக!

ஸ்லோகம் 14.

கொடிய அசுரக்கூட்டங்களை தேவர்கள் இன்றே நாசம் செய்யட்டும். அவர்கள் எங்களுக்குக் கொடுக்கும் சாபம் அவர்களையே மீண்டும் அடைவதாக! மந்திரங்களினால் நிரம்பும் அசுரக்கூட்டத்தின் உயிர்நாடிகளில் அஸ்திரங்கள் பாய்ந்து கிழிக்கட்டும்! பாலைக் குடிக்கும் அசுரர்களை, அக்கினி தேவனே! நீ அழிப்பாயாக! ஒவ்வொரு யதுதனனும் எங்கள் கையில் அகப்பட்டு அழியட்டும்!

ஸ்லோகம் 17.

பசு ஆண்டுதோறும் பால் தருகிறது. ஓ! அக்கினி தேவனே! அந்தப் பாலை யதுதனர்கள் உண்ணாதொழியட்டும்! பால் குடிக்க விரும்பும் யதுதனர்களின் குடலைப்பிடுங்கிக்கொள்வாயாக!

ஸ்லோகம் 18.

யதுதனர்கள் பசுக்களின் விஷத்தைக் குடிக்கட்டும். அவர்கள் அதிதியின் சாபத்துக்கு ஆளாகட்டும். சவிதா தேவன் அவர்களை பிராகரிக்கட்டும். அவர்களது பங்குக்குரிய பூண்டுகளை அவர்கள் இழக்கட்டும்.

அதர்வண வேதம், காண்டம் 1 மந்திரம் 7. ஸ்லோகம் 1.

ஓ தாசர்களை நிக்ரகம் செய்யவந்த அக்னியே! யதுதனர்களும் கிமிதின்களும் என் பாதங்களில் வந்து வீழ்ந்து மன்னிப்புக் கேட்கச் செய்வாய்!

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

# திருச்சி திராவிட வாலிபர் சங்க ஆண்டு விழா

## பெரியார் தலைமைப் பேச்சு

திராவிட வாலிப சங்கத்தார்களே,
தோழர்களே!

இந்த திராவிட வாலிபர் சங்க ஆண்டு விழாவுக்குத் தலைமைவகித்து தலைமை முன்னுரை நிகழ்த்துவது என்கின்ற சம்பிரதாய நிகழ்ச்சிப்படி நான் எதாவது பேசவேண்டும். அப்படிப் பேசுவதில் திராவிடர் என்பதுபற்றியும், நீங்கள் பெரிதும் இளைஞர்கள் ஆனதால் நானும் முதியோனாய் இருப்பதால் உங்களுக்கு சிறிது அறிவுரை வழங்குவது என்கின்ற தன்மையிலும் சில வாக்கியங்கள் சொல்வது பொருத்தமெனக் கருதுகிறேன்.

### நாம் திராவிடர்

நாம் நம்மை திராவிடர் என்று ஏன் சொல்லுகிறோம்?

இந்நாடு திராவிட நாடு, நாம் இந்நாட்டு மக்கள், இந்நாட்டுப் பழங்குடி மக்கள், இந்நாட்டில் மேன்மையாய் நாகரீகத்தில் சிறந்து மானிகளாய் வீரர்களாய் வாழ்ந்தவர்கள், வீரத் திராவிடர்கள் என்ற பெயரை சரித்திரகாலத்திற்கு முன்னிருந்து உடைத்தாய் இருந்தவர்கள், ஆதலால் திராவிடர்கள் என்கிறோம்; இதை நானாக அல்லது நானே சொல்லவில்லை, இது இன்றுமாத்திரம் சொல்லப்படவில்லை. இந்நாட்டுச்சரித்திரங்கள்? உலகச் சரித்திரம் தெரிந்த காலம் முதலாய் ஆராய்ச்சி நிபுணர்களான பல அறிவாளிகளால் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையும் இன்றும் பள்ளிப் பிள்ளைகளுக்கு வழங்கும் சரித்திர நூல்கள் முதல் புராணங்களில் குறிப்பிட்டு இருக்கும் கற்பனை, பழிச்சொற்கள், என்பவைகள்வரையில் காணப்படும் சேதிகளுமாகும்.

பழமைகள், பழமை சம்பவங்கள், காட்சிசாலைகளுக்கும், நேரப்போக்குப் பரிகாசத்துக்கும் சென்று கொண்டிருக்கும் இந்தப் புத்துலகில் பழங்காலச் சரித்திரத்தையும் பரிகசிக்கும் புராணத்தைப்பற்றியும்கூட ஏன் சொல்லுகிறேன் என்று கேட்பீர்கள். அந்தமாதிரி அதாவது, நம்மைப் பற்றி நம் முன்னைய நிலைமையைப் பற்றி மேலே நான் சொன்னமாதிரியாய் இருந்த நாம் இன்று எந்தமாதிரியில் இருக்கிறோம்? பழமை நிலைமையும் இயற்கையும் முற்போக்கில் மாற்றப்பட்டு இருக்கிறதா பிற்போக்கில் பிடீனும் மோசமான நிலைமையில் கொண்டுபோய் தள்ளி இருக்கிறதா என்பதை சிந்திக்கவும் நாம் அன்றைய சிறிதாவது மேன்மையும் மனிதத்தன்மையும் அடைந்திருக்கிறோமா அல்லது கீழ்மையும் இழிநிலையும் மானமற்றத் தன்மையும் அடைந்திருக்கிறோமா என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து மேலால் என்னசெய்யவேண்டும் என்று சிந்திப்பதற்கும் ஆகவேயாகும்.

### நாம் சூத்திரர்களா?

நாம் பிறவியிலோ தன்மையிலோ தகுதியிலோ சூத்திரர்களாக இருந்தவர்கள் அல்ல; உண்மையில் அல்ல. பின் நாம் யார்? என்றால் வீரத்திராவிடர்கள் ஆவோம். எப்பொழுதுமுதல் என்றால் முன் நான் சொன்னபடி உலக சரித்திரம் மனிதனால் ஆக்கப்பட்ட காலம் முதல் என்பேன். இவை வெறும் வார்த்தையால் மாத்திரம் அல்ல. நாடு இனம், பண்பு, நடைமுறை ஆகியவைகளால் இயற்கையைத்தழுவி திராவிடர்களானவர்கள். நமது இந்தமுடிவுகளை யாராலும் மறுக்கப்படவில்லை, நம் எதிரிகளாலும் மறுக்கப்படவில்லை. இந்த உணர்ச்சி நமக்குக் கூடாது என்று சொல்லும் சுயநல-சமயசஞ்சீவிகளாலும் கூட மறுக்கப்படவில்லை. ஆனால் நாம்தான் நாம் திராவிடர் என்று சொல்லிக்கொள்ள, நம்நாடு திராவிடம் என்று சொல்லிக்கொள்ள, நாம் சூத்திரர்கள் அல்ல என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுகிறோம்.

எப்படி மானமும் சுதந்திர உணர்ச்சியும் அற்ற ஒரு பெண் மற்றொரு ஆண் மகனைக் கண்ணால் பார்ப்பதால் கற்புப் போய்விடுமென்று கருதிப் பயப்படுகிறாளோ, பார்க்க வெட்கப்படுகிறாளோ அதுபோல் நாம் திராவிடர் என்று சொல்லிக்கொண்டால் நமது மதம் போய்விடும், தேசியம் போய்விடும், செல்வாக்குப் போய்விடும் என்று பயப்படுகிறோம், வெட்கப்படுகிறோம். அந்தக் காரணத்தாலேயேதான் நாம் சூத்திரர்கள் என்பதாக ஆக்கப்பட்டிருந்தாலும் இன்றும் சூத்திரர்களாக அதுவும் நாம் மாத்திரமல்லாமல் நம் இன்றைய ராஜாக்களும், மகாராஜாக்களும், பண்டாரசன்னதிகளும், ஜமீன்தார்களும், ஆயிரக்கணக்கான வேலி நிலமுள்ள மிராசுதாரர்களும், பல கோடி ரூபாய் செல்வமுள்ள ராஜா, சர் முதலியவர்களும் சூத்திரர்களாக இருக்கவும் நடத்தப்படவும் இதுதான் (நாம் திராவிடர் என்று உணராததும், உணர்ந்தாலும் சொல்லிக்கொள்ளப் பயப்படுவதும்) காரணமாகும். ஆனால் இந்த இழிவு அவர்களுக்கு (அப்படிப்பட்ட பெரியவர்களுக்கு) மிக சகஜமாகிவிட்டது. எப்படியோ அவர்களது ஆசாபாசம் அவர்களுக்குச் சகிப்புத்தன்மையை உண்டாக்கிவிட்டது. நமக்குப் பட்டம் இல்லை, பதவி இல்லை, செல்வம் இல்லை இவை பற்றிய மான மற்ற போனவை இல்லை, எனவே நாம் ஏன் திராவிடன் என்பதை மறந்து மறைத்துக்கொண்டு நம்மைச் சூத்திரன் என்பதைக் காரியத்தில் ஆதாரத்தில் ஒப்புக்கொள்ள வேண்டும்?

### சூத்திரன் என்றால் என்ன?

சூத்திரன் என்பது தாசிமகன், ஆரியர்களின் அடிமை, ஆரியகுலத்துக்கு ஆக, ஆரியர்களின் மேன்மை வாழ்வுக்கு ஆக இருப்பவன் இருக்கவேண்டியவன். இருந்துவருகிறவன் என்பதாகும். இதுதான் அந்த வார்த்தையின் அருத்தம். சாஸ்திரம் கடவுள் என்பவற்றின் வாக்குமாகும். ஆனால் உண்மையில் நாம் அப்படிப்பட்டவர்கள் அல்லாதவர்களாக இருக்கும்போது அந்தப்பெயரை ஏன் ஏற்று இருக்கவேண்டும்? என்று கேட்கிறேன்.

தோழர்களே, இக்காலத்தில் உண்மையான ஒரு தாசிமகனையே பாருங்கள். தனது தாய் தாசி என்றும், தனது வீடு தாசி வீடு தாசித்தனத்தால் வந்தது என்றும் தெரிந்தவன்கூட அதனது சுயமரியாதை கெடுவதால் தாசியே உலகில் இருக்கக்கூடாது. பட்டத்தில் இருக்கக்கூடாது, தன் தாய் வீட்டுக்குள்ளும் வேறொரு பயல் அவன் ஜமீன்தாரனானாலும், அவன் குருவானாலும், ஆச்சாரியனானாலும், மேற்பட்டவனானாலும் வரக்கூடாது" என்று தன் தாயை சகோதரியைக் கண்டிக்கிறான். வருகிறவனையும், வந்தால் தொந்தரவு செய்கிறவனையும் விரட்டி அடிக்கிறான், அவனைகளைய் அடித்துத் துரத்தியே விட்டான். இந்நாட்டிலும் அவர்களுக்கு தேவ அடியார்கள், தேவதாசிகள் என்று பெயர் இருந்தும்கூட, அதனால் நம் அயோக்கியத்தை என்ன என்று பாருங்கள். நாம் வேசி மக்கள், அடிமை (சூத்திரர்), என்று அழைக்கப்படுகிறோம். அப்படி நம்மை அழைப்பவர்களை சாமி என்கிறோம். அப்படிப்பட்டவர்களை நம்மிலும் மேலானவர்களாகக் கருதி "வைதீகக் கருமங்களை" (முட்டாள்தனமான, இழிவுதரும்படியான காரியங்களை) அவர்களைக்கொண்டு செய்வித்துக்கொள்கிறோம்.

அவைகளே வலியுறுத்தும் மார்க்கத்தை, சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்று நம்மை சொல்லிக்கொள்ளுகிறோம். வாயில் சொல்லிக்கொள்ளுவது மாத்திரமல்லாமல் மற்றவர்களுக்கும் தெரியும்படி அந்த குறிகளையும் (அதாவது ஒரு அடையாளத்தையும்) அணிந்துகொண்டு

றோம். இந்த வேதனையும், இழிவையும் மானமற்ற உணர்ச்சியையும் நினைக்கும்போதும், பெருக்கிச்சொன்னதுமான காரியங்களை நமது ஆத்மீக லௌகிக காரியமாய்க் கருதிச்செய்து வருகிறோம். இது நியாயமா? நமக்கு இது தகுதியா? அதுவும் இந்த 20வது நூற்றாண்டில் தகுமா? இதைப் பொறுத்துக்கொண்டு உயிர் வாழலாமா? என்று யோசித்துப் பாருங்கள்.

உன் சொந்த இழிவை நீக்கிக்கொள்ளாது நீ "நாட்டுக்குச் சுதந்தரம், மனித சமுதாயத்திற்கு விடுதலை, ஏழைகளுக்குச்செல்வம், உண்டாக்கப்பாடுபடுகிறேன்" என்றால் உன்னைவிட மடையனோ அல்லாவிட்டால் அயோக்கியனோ அல்லாவிட்டால் பித்தலாட்டக்காரனோ வேறு யார் இருக்கமுடியும். திராவிடனுடைய சரித்திரத்தில் இந்த இழிதன்மை என்றும் இருந்ததாகக் காணப்படவில்லையே!

## எது தேசியம்? எது விடுதலை?

ஆயிரக்கணக்கான சந்நிதிகளை தழியும் ஒட்டனுக்குள் சென்று சமமாய் இருக்க அனுமதியில்லை. பத்து லட்சக்கணக்காக செலவழித்துக் கட்டி வருஷம் லட்சக்கணக்காக செலவு செய்து பூஜை உற்சவம் செய்துவரும் கோவிலுக்குள் சென்று பிச்சை எடுத்துப் பிழைக்கும் உச்சிக்குடுமி மக்களுடன் சரிசமமாய் நின்று பிரார்த்திக்க உரிமை இல்லை என்பதாக இருந்துவரும், தாழ்த்தப்பட்டுவரும் மக்களுக்கு தேசியமா? சுயராஜ்ஜியமா?

உண்மை திராவிடன் இப்படிப்பட்ட சந்நிதிகளை மண்டபங்களையும், கோவில்களையும் [illegible] யாக்குவதையல்லவா தேசியம் சுயராஜ்ஜியம் என்று காணவேண்டும்?

இன்றைய தினம் இந்த நிலையைப் பொறுத்துக்கொண்டு இதை மாற்ற வேலை செய்பவர்களையும் எதிர்த்துத் தொல்லை விளைவித்துக்கொண்டு தேசியம், சுயராஜ்ஜியம், விடுதலை, என்று திராவிடன் பேசும் வஞ்சகரையும் தன்னை சிறிதளவு திராவிடத்தும் [illegible] டும் திராவிடன் என்று கூறுகிற அனைவரையும் அவன் சக்திகளின் அதாவது வெள்ளை ஆரியர், தமிழ்நிற ஆரியர் ஆகிய இரு கூட்டத்தினரின் கைகொள்ள பெற்ற அடிமைகள் [illegible] கட்டுக்கோப்பிற்குள் இருக்கும் துரோகிகள் என்று நாக்கு மேடையில் இருந்துகொண்டு கூறுவேன்.

## எது பொதுஉடைமை?

இன்றைய பொதுஉடைமைக்காரர்கள் என்பவர்களின் யோக்கியதை தான் என்ன? வெங்கடாசலபதிக்கு (ஒரு கருங்கல் பொம்மைக்கு) பத்துலட்ச (10,00,000) ரூபாயில் கிரீடமா? மற்றும் பல குழவிக்கல், தாம்பர பொம்மை ஆகியவைகளின் பேரால் நடக்கும் அட்டூழியங்களைப் பாருங்கள். ஊர்தோறும்கோவில், மணிதோறும் பூசை, மாதந்தோறும் உற்சவம், வருஷந்தோறும் சாமி திருமணமா? இவைகளுக்குப் பண்டு எவ்வளவு? பண்டம் எவ்வளவு? பூசாரி பண்டாரங்கள் எவ்வளவு? எனவே நம் நாட்டு இனத்தின் அறிவு, செல்வம், முயற்சி எதில் மண்டிக்கிடக்கின்றன? "நம்மவர்களே" ஆன [illegible] ஆகியவர்கள் [illegible] ம், இசை ஆகிய சங்கீதங்களும், நாடக மணிகள் நாடகங்களும், சினிமாக்களும், பண்டித மணிகள் வித்துவத்தன்மைகளும் இன்று எதற்காகப் பயன்படுகின்றன? இவைகள் பொதுவுடைமையின் எதிரிகள் அல்லவா? இவர்கள் எல்லோரும் தனி உடைமைக்காரர்களின் பெற்றவை இல்லாத அடிமைகள் அல்லவா? இவைகளை அசைக்காமல் அசையவிடாமல் காப்பாற்ற இடம் கொடுத்துக்கொண்டு பணக்காரனைப் பார்த்து ஆத்திரப்பட்டால், குமுறினால், பாமரத் தொழிலாளிகளை ஏமாற்றினால் பொது உடைமை ஆகிவிடுமா?

## காங்கரஸ்

காங்கரஸ், தேசிய விடுதலைக்காரன் யோக்கியதை தான் என்ன இதுவரை மேலே நான் கூறிவிட்டது. எந்த தேசியவாதி இந்தப் பக்கம் திரும்பினான், எந்தப் பொதுஉடைமை மாநாட்டில் எந்த தேசிய மாநாட்டில் இந்தத் தன்மைகளை ஒழிக்கப் பொங்கல் வைக்கவேண்டுமென்று பேசப்பட்டது? தீர்மானங்கள் செய்யப்பட்டது? நினைக்கப்பட்டது? இந்த மகா உத்தமர்கள் எங்களை குறை சொல்லுவதேதற்கு? அரசாங்கத்தைக் குறைசொல்லுவதேதற்கு? அரசாங்கம் இப்படி [illegible] செய்யச் சொல்லுகிறதா? அல்லது இவைகளைப் பற்றி பேசுவது ராஜத்துரோகமா? காப்பிக் கடைக்குள், கோவிலுக்குள் முன் மண்டபத்தில் "பறையனை" "சூத்திரனை" விடக்கூடாது என்று எந்த அன்னிய ஆட்சி சட்டம் செய்தது? கோவிலுக்கு [illegible] வைக்கச்சொல்லி, கடவுளை தாசி வீட்டுக்கு அழைத்துப் போகச் சொல்லி, கல்லுக்குத் தங்கத்தில் கவசம் போட்டு வைரத்தில் கிரீடம் வைக்கச்சொல்லி எந்த 'அடக்குமுறை சாண்ட அன்னிய ஆட்சி' சொல்லிற்று?

## எங்கள் கோபம்

இன்று எது ஒழியவேண்டும், யார் வெளியேற வேண்டும், எது மாறவேண்டும்? இவை அறியாத மக்களும், சுயநல வாதிகளும், சமயசஞ்சீவிகளும், வயிற்றுப்பிழைப்பு பொது ஊழியர், தேசபக்தர் கூட்டங்களும் எங்களை ஏன் வையவேண்டும். எங்களுக்கு எந்தப் பார்ப்பான் மீது கோபம்? எந்தக் கடவுள்மீது கோபம்? எந்தத் தலைவன்மீது கோபம்? எந்த ஜாதி மீது கோபம்? எந்த வெள்ளையனிடம் அன்பு? தோழர்களே! பித்தலாட்டத்தின் மீது கோபம், முட்டாள்தனத்தின் மீது கோபம், ஏமாற்றுகிற தன்மை மீது கோபம், மக்களை இழிவுபடுத்தியும், முன்னேற வொட்டாமலும் செய்து வைத்திருக்கும் சமயத்தின்மீதும் கோபம், இவைகளுக்கு ஆதரவளிப்பதால் வெள்ளையன் மீதும் கோபம்.

ஆகவே எங்களை காங்கரஸ்காரர்களும், பொதுஉடைமைக்காரர்களும் மற்றவர்களும் ஏன் கோபிக்கவேண்டும். ஏன் தொல்லை கொடுக்கவேண்டும்?

எங்களைத் தொல்லைகொடுப்பவர்கள் சுயநலக்கார எங்கள் எதிரிகள் அல்லது அவர்களது பெற்றதை அற்ற அடிமைகள் என்பவர்கள் அல்லாமல் வேறுயாராய் இருக்கமுடியும்?

—இளைஞர்களே! கடமை நடக்கட்டும் என்று நீங்கள் எதற்கும் துணிவு பெற்றுத் தொண்டாற்ற வேண்டிய காலம் இது.

நீங்கள் அடிபடவேண்டும். வாயப்படவேண்டும். குடும்பம் குடும்பமாகச் சிறைப்பட நேரிட்டாலும் மனம்

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

## இவ்வார நிகழ்ச்சிகள்

2-9-45 காலை 11 மணிக்கு பின்னவாசல் தோழர்கள் எஸ். பொன்னுசாமி—ரஞ்சிதம் திருமணம் தோழர் தி. பொ. வேதாசலம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கே. வி. அழகிரிசாமி, ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

o o

சேலம் ஜில்லா தமிழிசை மாநாடு நடத்துவது பற்றி யோசிக்கவும், வரவேற்புக்குழு அமைக்கவும், தோழர் ஈ. கணேசசங்கர் தலைமையில் 2-9-45 காலை 9 மணிக்கு சேலம் சென்ட்ரல் ஹாலில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். அனைவரும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகிறார்கள்.

o o

திருச்சி, மலைக்கோட்டை திராவிட வாலிபர் கழக 3-வது ஆண்டுவிழா 8-9-45 மாலை 6 மணிக்கு திருச்சி டவுன் ஹாலில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் நடைபெறும். தோழர் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ., (ஆனர்ஸ்) சொற்பொழிவாற்றுவார். ஒலிபெருக்கி உண்டு.

கூட்டத்தில் மாகாண மாநாட்டு டிக்கெட் விற்கப்படும் யாவரும் வாங்கிக் கொள்ளுமாறு கோரப்படுகிறது.

o o

சென்னை மூலக்கொத்தளம் சுப்பராயன் பாடசாலையில் 9-9-45 காலை 8-30 மணிக்கு தோழர் எஸ். லெட்சுமிரதன் பாரதி தலைமையில் தோழர்கள் பி. எஸ். மணி—டி. அந்தோனியம்மாள் திருமணம் நடைபெறும். தோழர்கள் அன்பழகன், ராமனாதன், குஞ்சிதம் குருசாமி, சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

o o

திருச்சி ஜில்லா மருத்துவர் மாநாடு ஸ்ரீரங்கம் தேவி ரங்கராஜா டாக்கீசில் 6-9-45 காலையில் பண்டித ஜஸ். எஸ். ஆனந்தம் தலைமையில் நடைபெறும். தோழர் தி. பொ. வேதாசலம் மாநாட்டைத் திறந்துவைப்பார். தோழர் எஸ். எல். கிருஷ்ணன் கொடி ஏற்றுவார்.

## வருந்துகிறோம்

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் தோழர் மோசூர் கந்தசாமிமுதலியார் அவர்கள் இயற்கையடைந்த செய்தி கேட்டு வருந்துகிறோம். அன்னார் தெளிந்த தமிழாராய்ச்சி அறிவும், ஜஸ்டிஸ் கட்சியிலே மிகுந்த பற்றும் கொண்டவர். அன்னாரது இழப்பு தமிழுலகிற்கு ஒரு பெரும் நஷ்டமாகும்.

## பழயகோட்டை பட்டக்காரர் மறைவு

சென்னை மாகாணத்தில் விவசாயம், கால்நடை உற்பத்தி ஆகிய துறைகளில் பேர்பெற்றப் பலருக்கு வழிகாட்டி இந்தியாவில் மாத்திரம் அல்லாமல் வெளிநாடுகளிலும் கீர்த்திபெற்றவரான பழயகோட்டைப் பட்டக்காரர் ராய்பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் தமது 59-வது வயதில் இருதயநோய் காரணமாக 27-8-45 இரவு 9 மணிக்கு முடிவெய்திவிட்டார் என்பதை மிக்க வருத்தத்துடன் குறிப்பிடுகின்றோம்.

அனாது முடிவானது இந்த மாகாணம் மாத்திரமல்லாமல் இந்தியக் கண்டத்திற்கே நஷ்டமான சம்பவம் என்று சொல்லலாம்.

கால்நடை உற்பத்தி, வளர்ப்பு ஆகிய துறையில் பழயகோட்டை இனம் (Breed) என்று சொல்லும் படியானதும் அழகு வண்ணம், வலிமை, நீண்ட ஆயுள், சலியா உழைப்பு ஆகியவைகளின் வேறு எந்த நாட்டுக் கால்நடைக்கும் இளைக்காததுமான ஒரு புதுப் பிறவியை வெகு காலமாக பரீட்சை பார்த்துத் தெரிந்தெடுத்து கலப்பு செய்து பெரும் மாடுகளை உற்பத்தி செய்து நாட்டுக்கு உதவி வந்தார். அவர் உற்பத்திசெய்த மாடுகளுக்கு ஜதை ஒன்றுக்கு 3000, 4000, 5000 ரூபாய்கள் வரை விலை மதிக்கத்தக்க பெருமை உண்டு என்பதோடு, பெரும் ஜமீன்தாரர்களுக்கும், இராணுவத்திற்கும், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கும் பழயகோட்டை பிரீட் (இனம்) மாடு வைத்திருப்பது என்பது ஒரு அணிகலமாகவும், பெருமையாகவும் இருந்தது என்று சொல்லலாம்.

அவர் கொங்குநாடு வேளாள சமுதாயத்திற்கு குருபோன்ற சமூகத் தலைவர், பதினாயிரக்கணக்கான ஏகர் விஸ்தீரண பூமியும், பெரிய செல்வமும் கொண்ட செல்வவான், பிரபலமானவர், பல நல்ல குணமும், உபகாரச் சிந்தையும் உடையவர், அப்படிப்பட்ட பெரியார் முடிவெய்தியது பெரியதொரு நஷ்டமேயாகும். எனினும் அந்த நஷ்டம் சரிப்படும்வண்ணம் அவரது மக்கள் பட்டக்காரர் நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்களும், அவர்களது இளையவர் இளையபட்டக்காரர் அர்ஜுனன் அவர்களும் எவ்வகையிலும் தகுதிவாய்ந்தவர்களும், மக்களால் பாராட்டி மதிக்கத்தக்கவர்களும் நாட்டின் தேவைகளில் பெரும் கவலையும், தீவிர உழைப்பும் கொண்டவர்களுமாக இருப்பதால் மக்களுக்கு ஆறுதல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அவர்களது குடும்பத்தார்களுக்கும் உறவினர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.


## மே. த. கவர்னரின் யுத்த நிதி

பிரிட்டிஷ் ஜனநாயக நாடுகள்
(காமன் வெல்த்)

வெற்றியடைய உதவியதற்காக
பெருமையடைகிறது.

★

ஆனல்

துருப்புகளின் சௌகரியங்களுக்கு
இன்னும் பொருளுதவி மிக மிகத் தேவையாகிறது.

# குடி அரசு

1945-ளு செப்டம்பர் 1-உ

## "தேர்தல் வந்துவிட்டது"

"தேர்தல் (சட்டசபை எலக்ஷன்) வந்துவிட்டது"—"வரப்போகிறது"—"வரத்தான் போகிறது" இதுதான் இந்த வாரத்திய புதுச் சரக்கு. "தேர்தல் வந்துவிட்டது" என்றால் என்ன அருத்தம்?

"மந்திரி பதவிகள் வீதியில் எறிந்தாய்விட்டது; வேண்டியவர்கள் எடுத்துக்கொள்ளுங்கள், ஆனால் பதவி பத்துத்தான், நீங்கள் பல்லாயிரவர்கள், எதோ சக்தி உள்ளவர்கள் எடுத்துக்கொள்ளுங்கள், பிரித்துக்கொடுக்கவோ தகுதிபார்த்துக் கொடுக்கவோ உரிமை பார்த்துக் கொடுக்கவோ என்னால் முடியாது, முடிந்தாலும் நீங்கள் அதற்கு தயாராயில்லை. ஆகவே கையின், தந்திரத்தின், காலித்தனத்தின் வலுத்தவனுக்குத்தான் அவை கிடைக்கும். எங்கே! புறப்படுங்கள் பார்க்கலாம்!! ஒன்-டூ-த்ரீ!!!" என்று சத்தம் விட்டுவிட்டார்கள் நம்முடைய சர்க்கார்.

சரி, கச்சை கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்கள் நம் மக்கள். யார் யார் என்றால்:

1. காங்கரஸ்
2. கம்யூனிஸ்ட்
3. ராயிஸ்ட்
4. (S. I. L. F. ஜஸ்டிஸ் கட்சி) அதாவது தங்களுக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத ஒரு கட்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டு அந்தப் பெயரால் மாத்திரமே எதோ ஒரு வழி காட்டுமே என்ற பேராசை கொண்ட, கட்சிப் பொறுப்பற்ற, கட்சிக்கு நன்றியும் விஸ்வாசமும் சிறிதும் காட்டாமல் கட்சியைப் பாழ்படுத்தி விட்டு அதை ஆபத்திலிட்டுஓடிப்போன, ஒரு தனிப்பட்ட சுயநல கோஷ்டி (கூட்டம்) அதாவது தங்களை [illegible] கட்டுப்போன போலிய "S. I. L. F. ஜஸ்டிஸ்கட்சியார்" என்று சொல்லிக்கொண்டு ஒரு காசுக்கு [illegible] என்று [illegible] டிக்கட் வாங்கும் கூட்டம்,
5. ரிஜிஸ்டர் சுயமரியாதைக் கட்சி—அதாவது எந்தக் கட்சி ஜெயித்தாலும் எதிர்க் கட்சியைக் காட்டிக் கொடுக்க, எதிர்க்கட்சி செல்வாக்கைத்தேடும் முறையில்யாராவது நம்மை அழைப்பதானால் அதனால் நமக்கும் ஒரு பிரைஸ் அடிக்காதா என்று கருதி ஒரு சான்ஸ் பார்க்கலாம் என்று தங்களை "ரிஜிஸ்டர் செய்து கொண்ட சுயமரியாதை லீக்" என்று சொல்லிக்கொள்ளும் ஒரு கூட்டம்,
6. இண்டிபெண்டெண்ட் கட்சி—அதாவது உரிமை இல்லாத சொத்து (அன்கிளைம்டு பிராபர்ட்டி) எதாவது நழுவி விழுந்து கிடைக்காதா என்று கருதி ஒரு சான்ஸ் பார்க்கும், கட்சிப் பேர் இல்லாத அல்லது தன்னையே தனிக் கட்சியாய் நினைத்துக் கொண்டு இருக்கும் பல தனித்தனிப் பெரியார்கள் முதலியவர்கள் என்று சொல்லலாம்.

ஆனால் இத்தனை பேர் பந்தயத்தில் வந்து கை ஒடிய, கால் ஒடிய, மார் உடைய ஓடினாலும் காங்கரஸ்காரர்கள்தான் மந்திரி பதவிகளை எடுத்துக்கொள்வார்கள் என்பதில் சந்தேகம் தோன்றவில்லை. எப்படி என்றால் ஓட்டர்களின் "தயவு" அவர்கள்தான் பெற்று இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான்உரிமைஉண்டு. அதற்கென்றே சகல விதமான பாடும் அவர்கள் தான் முறைப்படி பட்டு இருக்கிறார்கள். இது சரியாதப்பா இது உரிமையா தகுதியா நீதியா என்று கேட்பது அறியாமை அல்லது கோழைத்தனமாகும். எங்களில் இந்த நிலையில் யாரிடத்தில், நீதி உரிமை, தகுதியெல்லாம் பேசுவது?

ஒன்று அரசாங்கம் ஒரு யோக்கியமான முறையில் நீதி முதலிய தத்துவங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும், அல்லது கட்சிகளாவது அவற்றுள் எதாவது ஒன்றாவது அந்த முறைகளில் எதாவது ஒன்றைக்கொண்டதாக இருக்கவேண்டும், அல்லது ஓட்டர்களாவது அவற்றுள் எதாவது ஒன்றைத் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். ஒன்றும்ஒருவரிடமும் இல்லாவிட்டால் "சக்தி உள்ளவன் தானே ஒரு சாதனைதனை அடையமுடியும்" என்கின்ற தன்மையில் பேசுகிறோம்.

உண்மையில் வரப்போகும் தேர்தலில் காங்கரஸ்காரர்கள்தான் ஜெயிப்பார்கள் என்று சொல்லுவதும் ஜெயிப்பதும் எப்படியும் தவறாக ஆகிவிடாது. அவர்கள் ஜெயிக்கமாட்டார்கள் என்பதும் ஜெயிக்காமல் போவதும் தான் தவறாகவும் ஒரு மாபெரும் அதிசயமாகவும் ஆகிவிடும்.

எவ்வளவு நல்ல கேசும் வக்கீல் இல்லாமல் நடத்தமுடியாது. வக்கீல் இல்லாவிட்டால் 100க்கு 90பாகம் எக்ஸ்பார்ட்டி (சரியான எதிர்வாதம் இல்லை) என்று தான் கருதப்பட்டுவிடுகிறது. வக்கீல் வைத்தாலும் வக்கீலின் தகுதி, சாட்சிகளின் கெட்டிக்காரத்தனம், நீதிபதியின் சாய்வு, லஞ்சம் கொடுக்கும் தன்மை, சிபார்சின் செல்வாக்கு, ஆகியவைகளையும், கட்சிக்காரர்களின் தந்திரம், பணக்காரத் தன்மை, பிரயத்தனம் ஆகியவைகளையும் பொருத்தே இருக்கிறதை அநேகமாய்ப் பார்க்கிறோம். அதிலும் (சென்சேஷனல்) பொது மக்கள் கவனத்தை இழுக்கும் கேஸ்கள் பெரிதும் இந்தத் தன்மைகளுக்கே ஆட்பட்டதாகும்.

'நியாயம் ஜெயிக்குதா தோக்குதா' என்கிறதன்மைபறந்துபோய் ("யார் ஜெயிக்கிறார்கள்"?) என்பதே மக்கள் கவலையாகவும் கட்சிக்காரர்கள் கவலையாகவும் ஆகிவிடுகின்றன.

இந்தத் தன்மையில் இந்தத் தேர்தலில் காங்கரஸ்காரர்கள் தவிர வேறு யார் ஜெயிக்க சௌகரிய முடையவர்களாக இருக்கிறார்கள்? என்று கேட்கிறோம். 1936-ம் வருஷத்திலேயே, ஜஸ்டிஸ் கட்சியை நாம் ஆதரித்துக்கொண்டு இருக்கும்போதே அன்றைய நிலையைப் பார்த்து "வரப்போகும் தேர்தலில் பொப்பிலிராஜா தோற்றுப்போவார் என்று பதினாயிரம் ரூபாய் பந்தயம் கட்டுகிறோம். அவர் தோற்கமாட்டார் என்று யாராவது அதை அணைகட்டுகிறீர்களா" என்று இதே குடிஅரசு கேட்டது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அப்போது அவர் முதன் மந்திரி, உண்மையில் யோக்கியமானவர், பல நன்மைகள்

# திருச்சியில்

## செப்டம்பர் 29, 30 தேதிகளில் நடக்கும், ஜஸ்டிஸ்—சுயமரியாதை

# மாநாடுகள்

★

## திராவிட மக்களின் எதிர்கால வாழ்வைச் சித்தரிக்கும் மாநாடுகள் ஆகும்.

## தவறாமல் வந்து அண்மையில் நடக்கும் போராட்டத்திற்காகத் திரட்டப்படும் சேனையில் உங்கள் பெயரைப் பதிந்துகொள்ள

# வாருங்கள்!

---

செய்தவர், ஏராளமான பணம் செலவழித்தவர், சுயநலம் அடையாதவர். 'குடி அரசு'ம் அந்தக்கட்சிக்கே பிரசாரம் செய்தது. அப்படி இருந்தும் ஒரு சாதாரண பார்ப்பன மனிதருக்கு, விலாசம் தெரியாதவருக்கு அவர் தோற்றார் என்றால் இப்போது அதே கூட்டத்தார் அதே ஆட்கள் சொல்லிக்கொள்ளும் S. I. L. F. என்பதற்கு அந்தக் காலத்தைவிட என்ன அதிக யோக்கியதை வந்துவிட்டது? என்று கேட்கிறோம். காங்கரசுக்கு அப்போதைவிட இப்போது எதில் யோக்கியதை குறைந்துவிட்டது என்று கேட்கிறோம். இப்போது காங்கரஸ்காரர்களுக்கு ஒரு புதிய சக்தி வந்திருக்கிறது. பணம் 2 கோடி ரூபாயிருப்பது ஒரு புறமிருந்தாலும் 3 வருஷகாலம் ஜெயிலில் இருந்து வந்திருக்கிறார்கள். அதன் பயனாய் சர்க்காரும் அவர்கள் மறுபடியும் பதவிக்கு வந்தால்தான் தங்களுக்குத் தொல்லை இருக்காது என்று கருதுகிறார்கள். மற்றக் கட்சிகளை வளரவிடாமலும் செய்துவந்திருக்கிறார்கள். இவை தவிர காங்கரசுக்குக் கட்டுப்பாடு அதிகமாகி விட்டது. காங்கரஸ் எதிரிகளுக்கு யார்மீது ஆத்திரம் இருந்ததோ அவரும் (தோழர் ஆச்சாரியாரும்) இன்று காங்கரசில் இல்லை. முன்னைவிட இப்போது அதிகமான "பார்ப்பனரல்லாதாரை" தேர்தலுக்கு நிறுத்தி பார்ப்பன எண்ணிக்கையைக் குறைக்கப் போகிறார்கள்.

ஆனால் எதிர்க்கட்சிகளிலோ பிளவு அதிகம், பணம் செலவு செய்ய ஆட்கள் குறைவு, எதிர்கட்சியாருக்கு பத்திரிகை இல்லை. இருக்கும் பத்திரிகைகள் "காசிப் பத்திரிகை" "கூலிப் பத்திரிகை" "அடியோடு தனிக்கட்ட சுயநலப் பத்திரிகை" "அன்றன்றைக்கு யார் பணம் கொடுப்பார்களோ அவர்கள் பத்திரிகை" என்கின்ற பெயர்பட்டவை. இந்த நிலையில் 'S. I. L. F."க்கு என்ன சௌகரியம் இருக்கிறது, காங்கரசல்லாத கட்சிகளுக்கு என்று பாருங்கள். சுயமரியாதை லீக் கட்சி என்பதற்கு தோழர் எஸ். ராமநாதன் ஒரு புது வரவு. எஸ். ஐ. எல். எப். ஜஸ்டிஸ்கட்சி என்பதற்கு ஒரு தோழர் டாக்டர் கிருஷ்ணசாமி, ஒரு தோழர் கண்ணப்பர் என்பவர்கள் புது வரவு. இவர்கள் தன்மை, இவர்கள் மறுபடியும் கட்சிக்கு வருவதால் ஏற்படும் தன்மை வாசகர்களே தெரிந்துகொள்ளட்டும். ஆகவே வேறு எந்த வகையில் முன்பு அடியோடு தோற்றுப்போன கட்சி பழைய அளவுக்காவது பேர் சொல்லக் கூடிய நிலைமை அடைந்திருக்கிறது என்று பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம். உண்மை ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் கட்சி பேர்களை பட்டம் பதவிவிடத் தயாராய் இருக்கவேண்டும் என்று சொன்ன உடனும், ஜெயிலுக்குப் போகத்தயாராய் இருக்கவேண்டும் என்று சொன்னவுடனும் ஆளுக்கு ஒரு மூலையாக ஓடி ஒளிந்திருந்துவிட்டு மந்திரி நியமன சத்தம், தேர்தல் சத்தம் கேட்டவுடன் நான் ஜஸ்டிஸ்கட்சித் தலைவர், நான் பின்பற்றுகிறவர், நான்தான் ரீஜனல் லீடர், நான்தான் பிரசாரகன் என்று ஒரு நாலுபேர் கூடி ஆளுக்கு ஒரு உத்தியோகப் பேரை தாங்களாகவே வைத்துக் கொண்டு கண்ட கண்டவர்கள் பெயரை அவர்கள் சம்மதமில்லாமலும் அவர்கள் வைவதைப் பற்றி வெட்கப்படாமலும் தங்கள் கட்சி என்று விளம்பரப்படுத்திக் கொண்டால் பேர் தங்கி விடுமா? அல்லது மக்கள் முட்டாள்களாகி விடுவார்களா? அல்லது சர்க்கார் ஏமாளியாக இருந்து விடுமா? என்று கேட்கிறோம்.

பொதுவுடமைக் கட்சிக்காரன் 'கோவில் மடம் பற்றிப் பேசக்கூடாது,' 'ஜஸ்டிஸ்கட்சிக்காரன் ஜாதி, மதம், இனம் பற்றிப்பேசக்கூடாது.' 'சுயமரியாதைக்காரன் பெரியார் கொள்கைபற்றிப் பேசக்கூடாது.' ராய் கட்சிக்காரன்

'ஜஸ்டிஸ் கட்சிக்கு கொள்கை இல்லை, அமைப்பு இல்லை' என்று சொல்லவேண்டும். மற்றவர்கள் வேறு நிருத்தர் பெயரையும் சொல்லாமல் தான் எந்தக்கட்சி என்பதையும் காட்டிக்கொள்ளாமல் இருப்பது என்று சொல்லிக் கொண்டால் இந்த நிலையில் எப்படி காங்கரசைத் தொலைக்க முடியும்? அல்லது மக்களிடம் என்ன சொல்லுவது? "காங்கரசை விட எங்களுக்கு ஓட்டுசெய்யுங்கள்; அவர்களுக்கும் எங்களுக்கும் இன்ன இன்ன வித்தியாசம் இருக்கிறது" என்று சொல்லுவது எப்படி என்று கேட்கிறோம்.

"காங்கரஸ் பார்ப்பன ஸ்தாபனம் என்பது சரிதான், ஆனால் அதில் பார்ப்பனர்களைவிட பார்ப்பனரல்லாதார்களும் உங்களைவிட எதிலும் குறைந்தவர்களல்லாதாரும் இருக்கிறார்களே அதற்கென்ன சொல்லுகிறீர்கள்" என்று வேலன் பிரபுவும் ஓட்டர் பிரபுவும் கேட்டால் இவர்கள் என்னசொல்ல முடியும்? "அவர்கள் பார்ப்பன அடிமைகள், சுயநலக்காரர்கள், பதவி வேட்டைக்குப் போயிருப்பவர்கள்" என்று சொல்லக்கூடும்.

ஆனால் அதே வேலன் பிரபு அல்லது ஓட்டர் பிரபு இவர்களைப் பார்த்து அந்தப் பார்ப்பன அடிமைகளுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம். நீங்கள் எதில் பார்ப்பனர்களுக்கு அடிமை இல்லை. உங்களுக்கு எந்தப் பதவியில் விருப்பமில்லை. பார்ப்பனீயத்தில், மதத்தில், சாஸ்திரத்தில், ஆசாரத்தில் மாறுபாடா அல்லது அரசியலில், ஆசாரங்க சம்பளத்தில், அரசியல் அதிகாரம், சுதந்திரம் கேட்பதில் வித்தியாசமா? என்று கேட்டால் என்னபதில் சொல்லக் கூடும்? அல்லது இந்த வித்தியாசத்திற்காக நீங்கள் என்ன தியாகம் செய்தீர்கள் என்று கேட்டால் என்ன பதில் சொல்லக் கூடும்?

"காங்கரஸ்காரன் ரயில்தண்டவாளத்தைப் பேர்க்கும்போது நாம் கண்பிடித்துக்கொடுக்கவில்லையா" என்று சொல்லலாம். அதை சர்க்கார் ஆதரிக்கவேண்டாமா?

சர்க்கார் ஆதரிக்கவில்லை, என்பதோடு ஓட்டர்களும் அதனாலேயே மற்றவர்களை தேசத்துரோகிகள் என்கின்றார்கள் என்பது 20 வருட அநுபவத்தில் கண்டிருக்கும் ஜெயில் என்றால், "தியாகம்" என்றால், கவர்னர் வீட்டுத் தாழ்வாரத்தில் போய் ஒளிந்துகொண்டு இருந்துவிட்டு இன்று ஓட்டு என்றவுடன் திருஓட்டை எடுத்துக்கொண்டு பக்தர்களாக 'மதத்தைக் குற்றம் சொல்லவில்லை. சாஸ்திரத்தை (ஜாதியை) குற்றம் சொல்லவில்லை. எங்களுக்கு (ஓட்டுப்) பிச்சை போடுங்கள்" என்று வந்துவிட்டால் ஓட்டர்கள் எல்லோரும் தெய்வீக சக்தி பெற்ற மகாஉத்தம யோக்கிய ஞானபாக்கர்களாக ஆகிவிட்டார்கள் என்ற எண்ணமா அல்லது தர்மதேவதை ஆயிரங் காளுடன் உண்மை பக்தர்களை சத்தியசீலர்களைக் காப்பாற்றக் கிளம்பிவிட்டது என்ற எண்ணமா என்றுதானே கேட்க வேண்டி இருக்கும்? கோபித்துப் பயன் என்ன என்கிறோம்.

இன்றும் மந்திரி பதவியை சரியான (ஓட்டர் மார்க்கெட்டில் செல்லும்) நாணயத்தைக் கொடுத்து வாங்கவேண்டும் என்கின்ற நாணயமும் புத்திசாலித்தனமான யோசனை இருக்குமானால் ஜெயில் கிட்டாவிட்டாலாவது சென்று ஜெயில் கட்டிடத்தை எட்டிப் பார்த்து இருக்கவேண்டாமா? வேஷத்துக்காவது சர்க்கார் வீட்டிற்கு காலடிவைப்பதில்லை என்று சொல்லவேண்டாமா? என்று கேட்கிறோம்.

"ஹோம் துரை நமக்கு சிநேகிதர், நான் சொல்லும் சிபார்சை அவர்கள் கேட்பார்கள். ஜட்ஜ், மாஜிஸ்ட்ரேட்டுகள் சிநேகிதர்கள், எனக்கு டெல்லி சர்க்காரில் செல்வாக்கு உண்டு, வேண்டிய காரியம் செய்து கொடுப்பேன்" என்பன போன்ற செல்லாத நாணயம் (காசுகள்) என்பவைகள் எப்படி இன்றைய ஓட்டர்களை ஏமாற்ற உதவும்? என்று சிந்திக்கவேண்டாமா?

காங்கரசாரின் அக்கிரமம், அவர்களது புரட்டு, அவர்களது சூழ்ச்சி, சுயநலம் எல்லாம் நமக்கு நன்றாய்த்தெரியும்; அவை நிஜம்தான். ஆனால் அதை வெல்ல நாம் என்னசெய்ய வேண்டும்? என்பதில்தான் நம் கவலையே ஒழிய காங்கரசு உண்மையான கட்சி என்றோ, மனிதன் தேசபக்தனாவதற்கு ஜெயிலுக்குப் போகவோ, தியாகம் செய்யவோ வேண்டியது தியாகம் என்பதோ, நமது கடமை என்பதோ நம் எண்ணம் அல்ல.

காங்கரசில் மந்திரிகள் 9 பேரும் ஜெயிலுக்குப் போனவர்கள், காரியதரிசிகள், ஜெயிலுக்குப் போனவர் சட்டசபைமெம்பர்கள் பெரும்பாலும் ஜெயிலுக்குப் போனவர்கள் பிரசாரகர்கள் ஜெயிலுக்குப் போனவர்கள், ஜில்லாபோர்ட், முனிசிபாலிட்டி தலைவர்கள் பெரிதும் ஜெயிலுக்குப் போனவர்கள், காங்கரஸ் தலைவர்கள் ஜெயிலுக்குப்போனவர்கள்.

தோழர்கள் ராஜகோபாலாச்சாரி, பிரகாசம், டாக்டர் சுப்பராயன், காடிமுத்துப்பிள்ளை, கோபால்ரெட்டி, தேவர், அவனாசிலிங்கம் ஆகிய பெரும் வக்கீல்களும், பெரும் செல்வவான்களும் முறையே 1000, 2000 மாதம் வரும்படிவரும் வக்கீல்வேலை விட்டவர்களும்; குடும்ப நலத்தை விட்டு ஜெயிலுக்குப் போனவர்களுமாவார்கள்.

இவர்களோடு இந்த சர்க்கார் ஆட்சியில், யார் போட்டி போடத் தகுதி உள்ளவர்களாக இருக்க முடியும்? என்பதை, மந்திரி, காரியதரிசி, ஜி. போ. தலைவர், முனி. சேர்மென் ஆகவேண்டும் என்பதை சிந்திக்கவேண்டும்; அல்லது உண்மையாக நமக்கு வேண்டிய கொள்கையில் கவலையுள்ளவர்களாகவாவது கவனித்து இருக்க வேண்டும். நெற்றியில் நாமம், விபூதி, கம்பராமாயணம் பெரிய புராணம் ஆகியவற்றிற்கு ஆனைமேல் ஊர்வலம், சுவரெல்லாம் இராமன், கிருஷ்ணன், ஷண்முகம், சுப்பிரமணியன் படம், பூஜை, ஒருபுறம் செய்துகொண்டு தேவாரம், திருவாசகம், பிரபந்தம், தமிழனின் வேதம் என்று கருதுகிற பேசுகிற நடக்கிற மக்களுக்கும், பார்ப்பனரை குருவாக புரோகிதனாக வைத்து கல்யாணம், கருமாதி, சாந்தி, சஷ்டி, மோட்சதீபம் செய்கிறமக்களுக்கும் ஜஸ்டிஸ் கட்சி எதற்கு? சுயமரியாதைக் கட்சி எதற்கு? இவற்றின் பேரால் மந்திரிப்பதவி எதற்கு? என்று கேட்போம். காங்கரஸ்காரனைவிட இவர்கள் எம்

படி பாமர ஜனங்களுக்கு வழி காட்டுபவர்கள் ஆவார்கள்! என்று ஓட்டர்கள் கேட்கமாட்டார்களா?

ஆகவே உண்மையான ஜஸ்டிஸ் கட்சியையே சுயமரியாதைக் கட்சியையே இவர்கள் மதிக்காவிட்டாலும் இவர்களது சொந்தக் கொள்கையாவது இன்னது என்று காட்டி மக்களைத் திருப்திபடுத்தாமல் ஜஸ்டிஸ் முகமூடியைக் கொண்டு காங்கிரசல்லாத மக்கள் தேர்தலில் ஜெயிக்க ஆசைப்படுகிறார்கள் என்பது நமக்கு 8-வது அதிசயமாகக் காணப்படுகிறது.

## திருச்சி ஜஸ்டிஸ்—சு. ம. மாநாடு

திருச்சி மாநாடு முன் தெரிவித்தபடி இம்மாதம் 29, 30 தேதிகளில் நடக்க எல்லா ஏற்பாடுகளும் நடந்துவருகின்றன. புத்தூர் மைதானம் என்னும் ஒரு பெரிய வெளியில் பெரிய கொட்டகை போட ஏற்பாடாகி இருக்கிறது. சாப்பாட்டிற்கும், தனிப்பட்டவர்களுக்குச் சிறிது சவுகரியம் செய்து கொடுத்து சில ஓட்டல்கள் வைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. ஜில்லாக் கோட்டாக்களில் 4-ல் ஒரு பாகம்கூட இனியும் வந்து சேரவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கவேண்டி இருக்கிறது. ரூபாய் அனுப்பவேண்டியது முக்கிய காரியமாகும். அதில்லாமல் மாநாடு சிறப்பாய் நடப்பது என்பது எப்படி முடியும்? இம்மாதம் 7-ந் தேதிக்குள் பகுதி கோட்டா வந்து சேர்ந்தாகவேண்டும் என்பது நமது வேண்டுகோள்.

7-ந் தேதி திருச்சியில் ஒரு காரியக்கமிட்டிக் கூட்டம் நடக்கும். டிக்கட்டுகள் வேண்டியவர்கள் முன்னதாக (உடனே) எழுதி வாங்கிக்கொள்வது நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## "ஜஸ்டிஸைட்"

திராவிடர் ஆங்கில வாரப் பத்திரிகையான "ஜஸ்டிஸைட்" இவ்வார முதல் "குடி அரசு" அளவு 8 பக்கங்களில் வெளிவருகிறது. விலை ஒரு அணா

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்

23-8-45 திருச்சி
26— சேலம்ஜில்லா வேலூர்
27— திருச்சி
28— ஆத்தக்குடி
29— மதுரை
30— ஈரோடு
31— பழையகோட்டை

ஆகிய இடங்களுக்குச் சென்றுவிட்டு,

செப்டம்பர் மாதம் 1ந் தேதி விருத்தாசலம் பொதுக்கூட்டத்திற்கும்,

2ந் தேதி திட்டக்குடி மாநாட்டிற்கும்,

3ந் தேதி கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பேரவையில் தமிழைப்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தவும்,

இரவு கும்பகோணம் "வருங்கால வீரன்" என்னும் சீர்திருத்த நாடகத்துக்குத் தலைமை வகிக்கவும்,

4ந் தேதி திருச்சிக்கு மாநாடு விஷயமாகவும் சென்றுவிட்டு 5ந் தேதி சென்னை அல்லது ஈரோடு வரலாம்.

## வேண்டுகோள்

திருச்சி மாநாட்டுக்கு உங்கள் ஜில்லா கோட்டாப்படி உங்கள் பங்கை உடனே அனுப்பிக் கொடுங்கள். யாராவது வந்து கேட்கவேண்டுமென்று காத்திருக்காதீர்கள். ஏராளமான பிரதிநிதிகளைச் சேர்த்தனுப்புங்கள்.

## தென்னார்க்காடு மாவட்ட சுயமரியாதைச் சங்கம்

2-9-45-ல் திட்டக்குடியில் நடைபெறும் திராவிடர் கழக மாநாட்டில் இம்மாவட்ட சுயமரியாதைச் சங்கம் அமைத்து தீவிரமாக வேலை செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்படும். மாவட்டத்திலுள்ள சுயமரியாதை இயக்கத் தோழர்கள் யாவரும் அவ்வமயம் வந்திருந்து மேற்படி சங்கம் அமைக்கத் துணைபுரிய வேண்டுகிறேன்.

அமைப்பாளர்,
ஆ. திராவிடமணி பி. ஏ.,
கடலூர்.

## திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

1-9-45 வரையில்
அங்கத்தினர்கள் 33963
சந்தா ரூ. 3370—0—0

## ராசிபுரம் தாலூகா 4-வது சுயமரியாதை மாநாடு

ஷை மாநாடு ராசிபுரம் பாலசுப்பிரமணியா தியேட்டரில் பெரியார் ஈ. வெ. ராமசாமி தலைமையில் 9-9-45 ஞாயிறு காலை 8 மணிமுதல் தொடங்கி நடைபெறும்.

தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ. மாநாட்டைத் திறந்துவைப்பார்.

பழையகோட்டை இளையகுமார பட்டக்காரர், தோழர் என். அர்ச்சுனன் கொடியேற்றி வைப்பார்.

தோழர்கள் எஸ். மீனாட்சிசுந்தரம் பி. ஏ., எல். டி., தி. பொ. வேதாசலம் பி. ஏ., பி. எல்., குஞ்சிதம் அம்மையார் பி. ஏ., எல். டி., புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், ஆர். அன்னம்மையார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

மாநாட்டுப் பந்தலிலேயே காலை 8½ மணிக்கு தோழர் கே. வி. கே. ராமசாமி அவர்கள் மகள் பாலாயம்மாளுக்கும், அலிநகர் தோழர் சச்சிமுத்து அவர்களுக்கும் பெரியார் தலைமையில் திருமணம் நடைபெறும்.

மோட்டார் நிலயத்திலிருந்து தோழர் பெ. கிருட்டிணன் சாரதத்துடன் தலைவர்கள் ஊர்வலம் காலை 8 மணிக்கு நடைபெறும்.

மாலை 5 மணிக்கு சந்தைப்பேட்டையில் பொதுக் கூட்டம் நடக்கும்.

பெண்களுக்குத் தனி இடவசதியுண்டு.

ஒலிபெருக்கி அமைக்கப்படும்.

ஜீ. பி. சோமசுந்தரம், வரவேற்புத் தலைவர்.

ஆர். எஸ். தங்கமுத்து, கே. வி. கே. ராமசாமி செயலாளர்கள்.

## பெரியார் பேட்ஜ்

பெரியார் பேட்ஜ் ஓவல் வடிவ, ரவுண்ட் சைஸ் (சகாத்தில்) ஒன்றின் விலை 3 அணா. வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

எஸ். எஸ். சுந்தரம்,
4, ஜூப்பிலி சால், தாராவி, பம்பாய்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கலங்காமல் நிற்கும் துணிவுபெற வேண்டும். இதற்குத்தான் திராவிட இளைஞர் கழகம் இருக்க வேண்டும்.

நாடானது விடுதலை, சமதர்மம், முன்னேற்றம், சீர்திருத்தம், கலை, கல்வி, தேசியம் என்னும் பேர்களால் மிக்க அடிமைத்தனத்திற்கும், காட்டுமிராண்டித்தனத்துக்கும் போய்க்கொண்டு இருக்கிறது. வேசிக்கும் விபசாரிக்கும் தேவர் அடியாள் என்று பெயர் இருப்பது போல் நாட்டின் மனித சமுதாயத்தின் இழிவுக்கும், கீழ்மைக்கும், ஏழ்மைக்கும், அடிமைக்கும், அயோக்கியர்கள் ஆதிக்கத்திற்கும் மேற்கண்ட விடுதலை முதலிய பெயர்கள், சாதனங்கள் இருந்து வருகின்றன.

தோழர்களே! துணிவுகொள்ளுங்கள், சாகத் துணிவுகொள்ளுங்கள், உங்கள் சொந்த வாழ்வு நலத்தையும் மானத்தையும் விட்டுத் தொண்டாற்றத் துணிவு கொள்ளுங்கள். இதுதான் இன்றைய திராவிட மாணவர் கழக ஆண்டு விழாவில், இனி வெகு காலம் வாழப்போகும் மக்களாகிய உங்களுக்கு வயதாகியும் கிழவனாகிய நான் வைத்துவிட்டுப் போகும் செல்வமாகும்.

"உன்சொந்த மானத்தைவிட்டாகிலும், உன் இன மானத்தை காப்பதற்குத் தொண்டு ஆற்று"

"உன் இனத்தின் இழிவை, மானத்தைப் போக்க உன் சொந்த மானத்தையும் பலிகொடு."

"இனத்தின் மானத்தைக் காக்க எவ்வகைத் துன்பத்தையும் பொறுத்துக்கொண்டு தொண்டாற்றத் தக்க குடிமகன் இல்லாத இனம் வேர்ப்பற்றில்லாத மரம்போல்— சோடாவிகொண்டு வெட்டவேண்டிய அவசியம் இல்லாத மரம் போல்-தானாகவேவீழ்ந்துவிடும்"

"தன் இனத்திற்கு உண்மையான தொண்டாற்றுபவனுக்கு அவமானம் என்னவென்றால் அத்தொண்டால் ஏற்படும் இன்னலுக்கும், துன்பத்திற்குமே அவனது வாழ்க்கையும், உடலையும் ஒப்புவித்துவிட்டவனாக இருக்கவேண்டும்."

இதுதான் சொல்லுவதற்கு, இதன் சாக்கியமாகும்.

## அறிக்கை

வடஆற்காடுஜில்லா திராவிடர் கழகங்களுக்கும் நமது இயக்கப் பிரமுகர்களுக்கும் வேண்டுகோள்:-

ஐயா,

29, 30-9-45 சனி ஞாயிறுகளில் திருச்சியில் நடைபெறப்போகும் மாகாண திராவிடர் கழகம், சுயமரியாதைக் கழக மகாநாடுகளுக்கு நமது ஜில்லாவில் 500 ரூபாய்க்குமேலும் அனுப்ப உத்தேசித்துள்ளபடியால் நமது ஜில்லா பல பாகத்தில் உள்ள திராவிட கழகத்தார்களும் தனிப்பட்ட இயக்க அன்பர்களும் அவரவர்கள் வேண்டிய பொருள் உதவி புரியுமாறும் அப்படி அனுப்பும் பணத்தை ஜில்லா கழகத்தின் மூலமாக அனுப்பினாலும்சரி அல்லது தாங்களே திருச்சி மகாநாடு செயலாளருக்கு அனுப்பினாலும் எவ்வளவு பணம் அனுப்பினீர்கள் என்பதை ஜில்லா கழக தலைமை நிலையத்திற்கு தெரியப்படுத்துவதோடு மகாநாட்டிற்கு யாவரும்வந்து சிறப்பாக நடத்திக் கொடுத்து நமது இயக்க வேலைகளுக்கு உடன் உதவிபுரியுமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம். நமது ஜில்லாவில் உள்ள திராவிட மாணவர் கழகங்களும் இதில் பங்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

எம். நடேசபிள்ளை,
வ. ஆ. ஜி. திராவிடர் கழக காரியதரிசி;
வி. எம். ராசமாணிக்கம்,
வ. ஆ. ஜி. திராவிடக்கழக ஆர்கனைசர்;
ஜோலார்பேட்டை, மிட்டாதார்
வி. பார்த்தசாரதி, சு. ம. கழகம்.

இவ்வறிக்கை இந்த அறிக்கைத் தோழர் வ. டி. சுப்பையா அவர்களால் "குடி அரசு" வளர்ச்சிக்கென ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

## தென்னாற்காடுமாவட்டத் தோழர்களுக்கு

திருச்சியில் நடைபெறவிருக்கும் மாகாண மகாநாடுகளுக்காக நமது மாவட்டத்தில் பொருள் வசூல் செய்ய டிக்கட்டு பெற்றுள்ள தோழர்கள் தங்கள் ஊர்களிலும், சுற்றுப்புறங்களிலும் உடனே வசூல் செய்து குறைந்த தொகையாயிருப்பினும் விரைந்து அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாவட்டங்கள் தமது கடமையை நிறைவேற்றுகையில் நாம் மட்டும் பின்னணியில் இருப்பது அழகாகுமா? ஆவனசெய்ய வேண்டாமா? இன்றே கவனித்து இயன்றதைச் செய்யுங்கள், தோழர்களே! முயன்றால் ஆகாததொன்றுமில்லை.

ஆ. திராவிடமணி.


## தானே இயங்கும் கைத் துப்பாக்கி

(தற்காப்புக்காக)





ஒரே தடவையில் 6-குண்டுகளை சுடும். துஷ்ட மிருகங்கள், திருடர்கள் அபாயத்தினின்றும் தப்பித்துக் கொள்ளலாம். லைசென்ஸ் தேவையில்லை. குண்டுகளுடன் விலை ரூ 8 சிறந்தரகம் ரூ 12 போஸ்டேஜ் பாக்கிங் ரூ. 1/4. ஒவ்வொரு ஆர்டருடனும் ஒரு பொம்மை கைகடிகாரம் இனாம். கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் எழுதவும்.

Calcutta watch co., (sec 637)
P. B. No. 12203, Calcutta.



திராவிடத் தோழர்களே! எதிர்கால வீரர்களே!

## நீங்கள் உடல் நலத்துடன் இருக்கிறீர்களா?



உடலைமட்டும் சுத்தம் செய்வதில் பயனில்லை. குடலைஎப்பொழுதும் சுத்தமாய்வைத்துக்கொள்ள வேண்டும். படத்தைப்பாருங்கள். குடல் இரைப்பை ஒழுங்கீனத்தினால், வாந்தி, மயக்கம், தலைவலி, தொண்டைப்புண், நெஞ்சுவலி, முதுகுவலி, வயிற்றுவலி, குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய் முதலியவைகள் ஏற்பட்டு, நாளடைவில் குடலில் கிருமிகள் சேர்ந்து உடலைப் பாழ்படுத்துகின்றன. ஆகையால் மேலேகண்ட நோய்க்கு இடங்கொடாமல் குடலை சுத்தப்செய்ய,

ஜெயராம் காயசுத்தி லேகியத்தை உபயோகியுங்கள்.

ஒருதடவை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

1சேர் டப்பி ரூ. 4. ½சேர் டப்பி ரூ. 2—2—0. V. P. P. வேறு.

ஜெயராம வைத்தியசாலை,
28, சாமிபிள்ளைதோட்டத் தெருவீதி, கும்பகோணம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்லோகம் 4.

முதலில் அக்னி தேவன் அசுரர்களைப் பிடிக்கட்டும், வஜ்ராயுதனான இந்திரன் அசுரர்களை விரட்டிக்கொண்டு வரட்டும். யதுதானர் ஒவ்வொருவரும் என் முன் வந்து "இதோ நான் வந்திருக்கிறேன். அடிபணிகிறேன்" என்று கூறட்டும்.

ஸ்லோகம் 5.

ஞானஸ்வரூபியான அக்கினியே! நாங்கள் உன் வீரத்தைக் கண்டு களிக்கட்டும். திவ்யதிருஷ்டியுடைய அக்னியே! யதுதானர்கள் இருக்கும் இடத்தைக் காட்டிக்கொடுப்பாயாக! உன் சுவாலையால் எரிக்கப்பட்டு, அவர்கள் எங்கள் யாகங்களில் வந்து நாம சங்கீர்த்தனம் செய்துகொள்ளட்டும்.

ஸ்லோகம் 7.

ஓ அக்னி தேவனே! யதுதானர்களையெல்லாம் பிடித்து விலங்கிட்டு எங்கள் முன் கொண்டுவருவாயாக! இந்திரன் இடியினால் அவர்கள் தலைகளைக் கொய்து தள்ளட்டும்.

அதர்வண வேதம் காண்டம் 1
மந்திரம் 8, ஸ்லோகம் 2.

இதோ இவன் சரணாகதியடைந்து மன்னிப்புக் கேட்கிறான். அவனை அன்பு கூர்ந்து ஏற்றுக்கொள்கிறாயா? ஓ பிரகஸ்பதியே! அவனைச் சிறைப்படுத்திவைப்பாயாக! ஓ! அக்னியே! ஓ! சோமனே! அவன் உடலைக் குத்திக் கிழிப்பீர்களாக!

ஸ்லோகம் 3.

சோமபானம் செய்யும் இந்திரனே! யதுதானர்களின் சந்ததிகளை அடித்துப் பிடித்து இழுத்துக் கொண்டு வருவாயாக! யாகமன்னிப்புக் கேட்போரின் வலக் கண்ணையும் இடக்கண்ணையும் பிடுங்கிவிடுவாயாக!

நமது தீண்டப்படாத சகோதரர்களின் முன்னோர்களைப் பற்றி இவ்வாறெல்லாம் வேதங்களில் கூறப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு விரோதமாக வேதங்களில் பல கட்டளைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆரியர்கள் இந்த நாட்டைப் பிடித்துக்கொண்டு வந்த காலத்தில் அந்தக் கட்டளைகள் வகுக்கப்பட்டன. ஆரியர்—ஆதி இந்தியர் போர் முற்றுப்பெற்று நாட்டில் அமைதி நிலைத் தொடங்கிய போது, பகைமை, பொறாமை, வெறுப்பு முதலியவைகளை அடிப்படையாகக் கொண்டு பல சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டன.

அவைகளே மனுஸ்மிருதியாலும், மற்ற இந்து சாஸ்திரங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன. இவை யாவரும் உணர்ந்த உண்மைகளாதலால் அவைகளைக் கூறத் தேவையில்லை.

இந்தியர்களில் நான்கிலொரு பகுதியாரை இந்தச் சட்டதிட்டங்கள் கட்டுப்படுத்தி அடிமைகளாக்கி வைத்திருக்கின்றன. தீண்டப்படாதவர்களின் முன்னேற்றத்துக்காக எவ்வளவோ பேர் பாடுபட்டும் பலனேற்படவில்லை. இப்பொழுதும் சுமார் 7 கோடி மக்கள் தீண்டப்படாதவர்களாகவே மதிக்கப்பட்டு வருகிறார்கள். தீண்டாமை ஒழிப்பு மசோதாவை சட்டசபையில் கொண்டுவந்து சட்டமாக்கி வைக்கக் காந்தியாராலும் முடியவில்லை! சமூக வாழ்வில் தலைகீழ்ப்புரட்சியான காரியங்களை அதிதீவிரமாகச் செய்தால்தான் ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலை உண்டாகும்.

அவர்களது தலைவர்களிற் சிலருக்கு இப்பொழுதாவது நற்புத்தி உதயமாகியிருப்பது பாராட்டத்தக்கது. தம்முடையவும், தமது சமூகத்தாருடையவும் [illegible] கேட்டை ஒழிக்க அவர்கள் செய்யும் முயற்சி வெற்றிபெறுவதாக!"

## பிறப்பு

கொழும்பு சுயமரியாதை இயக்கத் தோழர் எஸ். வி. சிங்காரம் அவர்கள் மனைவியார் 8-5-45-ல் ஈன்ற ஆண் குழந்தைக்கு 3-7-45-ல் தோழர் தங்கையா தலைமையில், இராவணேசன் என்று பெயரிடப்பட்டு, தோழர்கள் கடவுள், மாயகிருட்டினன், அருணாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாகக் 'குடி அரசு'க்கு ரூ. 5 நன்கொடை அனுப்பப்பட்டது.

## வருந்துகிறோம்

19-8-45 சென்னை புதுப்பேட்டையில் நடக்கவிருந்த திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் பல காரணங்களால் நடைபெறாததற்காகத் தாம் மிகவும் வருந்துவதாகப் புதுப்பேட்டை திராவிடர் கழகச் செயலாளர் தோழர் வி. எஸ். கிருஷ்ணசாமி எழுதுகிறார்.

## மதிப்புரைகள்:

### மறக்குடி மகளிர்

[ஆசிரியர்: எஸ். சிவப்பிரகாசம்; வெளியிடுவோர்: 'தொழிலாளர் மித்திரன்' அலுவலகம், பாண்டிச்சேரி; விலை: 8 அணா.]

புறநானூற்றுப் பாடல்களிற் சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு பண்டைத் தமிழ்ப் பெண்டிரின் வீரத்தையும், சிறிய பண்புகளையும், அழகான எளிய தமிழ் நடையிலியன்றுள்ள சுமார் நூறு விருத்தப் பாக்களின் வாயிலாய் வெளிக் காட்டுகின்றார் கவி கனக சுப்புரத்தினத்தின் தலைசிறந்த மாணவராகிய தோழர் சிவப்பிரகாசம் அவர்கள்.

### அந்தமான் கைதி

[ஆசிரியர்: கு. சா. கிருஷ்ணமூர்த்தி; வெளியிடுவோர்: தமிழகம் காரியாலயம், புதுக்கோட்டை; விலை ரூ. 1-8-0]

சாதாரண தமிழ்நடையில் இயன்றுள்ளது இந்நாடகம். நடிப்பதற்கு ஏற்றதாகவே தோன்றுகிறது. சமூகக் கட்டுப்பாடுகளை உணர்த்துவதற்காகவே இதனை இயற்றியதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ராஜாசாண்டோ இதனை [illegible] இதை வெளியிட்டுள்ளனர்.

### நாடும் ஏடும்

[தளபதி சி. என். அண்ணாதுரை பேச்சு; வெளியிடுவோர்: 'தமிழுலகம்' காரியாலயம், மண்ணடி, சென்னை; விலை 4 அணா.]

நமது தலைவர், தளபதி ஆகியோரின் அரிய கருத்துக்களை அவ்வப்பொழுது வெளியிடுவதற்குத் தக்க பத்திரிகை வசதி நமக்குக் கிடையாது. இன்றுள்ள மக்கள் இக்கருத்துக்களைப் போற்றவும் அனுபவிக்கவும் முடியாத நிலைமையிலிருப்பினும் எதிர்காலப் பகுத்தறிவு உலக மக்கள் நல்லரும்பெருங் கருத்துமிக்க உரைகளை ஆவலுடன் எதிர்நோக்கி நிற்பர் என்பதில் ஐயமில்லை. ஆகவே அவர்கள் ஆவலைப் பூர்த்தி செய்யத் தக்க சிறந்த சாதனமாக இம்மாதிரிப் புத்தகங்கள் தேவையாகின்றன. தளபதி அண்ணாதுரை அவர்கள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவை இளைஞர் தோழர் நடேசனாயம் மிகுந்த ஜாக்கிரதையுடன் திரட்டியுள்ளார். அவரது இந்த முயற்சி பாராட்டத்தக்கதேயாகும். குறைந்த விலையிலுள்ள இச்சிறு நூல் ஒவ்வொரு திராவிட மகன் கையிலும் அவசியம் இருக்கவேண்டும்.

---

20-8-45 சன்னாசல்லூரில் தோழர் எஸ். பக்கிரிசாமி முயற்சியால் வெற்றி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ரோஜா முத்தையா

# திராவிடக் கழகங்கள்

தஞ்சை திராவிட மாணவர் கழகத்தின் உறுப்பினர் கூட்டம் 19-8-45 மாலை கூடி, 16-9-45 அன்று முதலாம் ஆண்டு விழாவை நடத்துவதென்றும், அதற்குத் தோழர்கள் வேதாசலம், அண்ணாத்துரை, நெடுஞ்செழியன், அழகிரிசாமி ஆகியோரை அழைப்பதென்றும் தீர்மானித்தது.

பட்டுக்கோட்டையில் 30-7-45 மாலை தோழர் சி. என். விசுவநாதம் தலைமையில் நடைபெற்ற திராவிட மாணவர் கழகத் தேர்தலில் தோழர்கள் எம். வெங்கடேசன் தலைவர், ஜே. ஜெயராமன் துணைத்தலைவர், சி. என். வெங்கடேசன், எஸ். கலியபெருமாள் கூட்டுச் செயலாளர்கள்; ஆர். சேதுராமன் பொருளாளர் மற்றும் ஏழுபேர் நிர்வாக உறுப்பினர் என்று தெரிந்தெடுக்கப்பட்டது.

வடஆற்காடு மாவட்ட திராவிடர் கழக நிர்வாகிகள் பின்கண்டவாறு:- தோழர்கள் வி. எஸ். வீரபத்திர முதலியார் தலைவர், திருநாவுக்கரசு, சித்தா ரெட்டி, கந்தசாமிக் கவுண்டர் துணைத் தலைவர்கள், எம். நடேச பிள்ளை செயலாளர், ஏ. பெருமாள், பேரணூர் சுப்பிரமணியம் துணைச்செயலாளர்கள், சி. ஆர். அருணாசலஞ் செட்டியார் பொருளாளர், ஓ. பழனிமுத்து, ஏ. பி. ஜனார்த்தனம், வி. எம். ராஜமாணிக்கம் அமைப்பாளர்கள், மற்றும் 25 பேர் கமிட்டி மெம்பர்கள்.

வாணியம்பாடி கிழக்கு திராவிடக் கழக நிர்வாக உறுப்பினர் கீழ்வருமாறு: தோழர்கள் எம். பி. வடிவேலு தலைவர், எ. ராகவன் துணைத் தலைவர், பி. பழனிமுத்து செயலாளர், சி. அப்பாதுரை துணைச்செயலாளர், த. மு. தங்கவேலு முதலியார் பொருளாளர், மற்றும் 3பேர் பிரசாரகர்கள், 5பேர் நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள்.

17-8-45 திருவத்திபுரத்தில் சிறப்பு பெற்ற 'சுயமரியாதைத் திராவிடர் கழக' நிர்வாக உறுப்பினர் கீழ் வருமாறு:- தோழர்கள் டி. எம். ஏ. ஜெயராமன் பி. ஓ. தலைவர், [illegible] தேவராசன், மா. ஏ. இராமலிங்கம் செயலாளர்கள், எஸ். சம்பந்தன், வேல்விநாயகம் துணைச்செயலாளர்கள், ஏ. குப்புசாமி பொருளாளர் மற்றும் [illegible] ஆறுபேர் உறுப்பினர்.

12-8-45ல் நடந்த புன்னைநல்லூர் திராவிடர் கழகத்தேர்தலில் கீழ்க்கண்டவர் நிர்வாக உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்:- தோழர்கள் கே. சுப்பிரமணியம் தலைவர், எஸ். சிதம்பரநாதன் துணைத் தலைவர், ஆர். முருகேசன் செயலாளர், கே. சிதம்பரம் துணைச்செயலாளர், எம். சச்சிதானந்தம் பொருளாளர், மற்றும் 6-பேர் உறுப்பினர்.

23-8-45ல் நடந்த பட்டுக்கோட்டை திராவிடர் கழகத்தேர்தலில் தோழர்கள் சி. என். விசுவநாதன் தலைவர், ஆர். ஜெயராமன் துணைத்தலைவர், டி. ஆத்மராமன், ஆர். சுப்பிரமணியன் செயலாளர்கள், எஸ். நடேசசாமி பொருளாளர் மற்றும் 12-பேர் நிர்வாக உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

திருச்செங்கோடு திராவிடர் கழகக் கூட்டம் 9-8-45 மாலை 9-மணிக்கு தோழர் விஸ்வநாதம் தலைமையில் கூடியது. தோழர்கள் ஆர். கே. ஆறுமுகம் தலைவர், கே. ஏ. எஸ். அண்ணாமலை முதலியார் துணைத்தலைவர், கே. பரமசிவம் செயலாளர், எஸ். கே. பி. வேல் துணைச்செயலாளர், ஆர். வி. பொன்னுசாமி பொருளாளர், ஏழு பேர் உறுப்பினர் என்று தெரிந்தெடுக்கப்பட்டது.

வெளியூருக்கு மாற்றப்பட்ட இயக்கத் தோழர்கள் உயிர்மணி, ஆடலரசு ஆகியோருக்கு கழகத்தின் சார்பில் உண்ணல் விருந்து அளிக்கப்பட்டது. அத்தோழர்களைப் பற்றிச் சிறப்பித்து பரமசிவம், உலக ஊழியர், மஜீத்கான் ஆகிய தோழர்கள் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் முடிந்தது.

பட்டுக்கோட்டையில் திராவிடர் கழகம், சு. ம. சங்கம் சார்பில் 19-8-45 மாலை தோழர் என். பி. கலியப்பன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. உள்ளூர் இயக்க அன்பரான தோழர் எஸ். கே. குஞ்சலிங்கம் செட்டியார் இயற்கை எய்தியதற்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேறிய பின் 'சுயமரியாதையும், திராவிடர் கழக லட்சியமும்' என்பது பற்றித் தோழர்கள் கே. வி. அழகிரிசாமி, கே. எஸ். சிவராமன், அப்துல் ரஹுமான் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

மண்ணச்சநல்லூர் திராவிடர் கழகக் கூட்டம் 28-8-45 இரவு தோழர் வி. கே. ஆண்டி செட்டியார் தலைமையில் கூடி ஆண்டுவிழாவுக்கு தோழர் அண்ணாதுரையை அழைப்பதென்றும், [illegible] ரூ. 101 பணமுடிப்பளிப்பதென்றும், அந்த ஆண்டுவிழாவை சொந்த இடத்தில் நடத்த பொருள் வசூலிப்பதென்றும் தீர்மானித்தது.

தர்மபுரி திராவிடர் கழகப் பொதுக் கூட்டம் தோழர் மஞ்சையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தமிழ்ப் பண்டிதர், கே. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஆகியோர் பேசினர். நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிவுற்றது.

20-8-45 குளூரில் வெற்றி விழாவை ஒட்டி பல ஏழைகட்கு அன்னமளிக்கப்பட்டது. மாலை பொதுக் கூட்டத்தில் தோழர் எஸ். பி. மீனாட்சியம்மாள் பேசினார்.

## மறைவு

புதுவையில் நமதியக்க அன்பரான தோழர் இலக்குமண்பிரசாத் சகோதரியும், தோழர் பால்மோகன் பிரசாத் மனைவியுமான தோழர் சாரதா அம்மையார் 19-8-45-ல் இயற்கை அடைந்ததற்காக வருந்தி புதுவை நகர் கம்பெனியார் தம் அனுதாபம் தெரிவிக்கின்றனர்.

ஜயம்பேட்டை இயக்கத் தோழர் அரங்கசாமி அவர்களின் தந்தையார் இயற்கை எய்தினமைக்காக, மருத்துவகுல சங்கத்தலைவர் தோழர் பி. சோமு தலைமையில் நடைபெற்ற நீத்தார் நினைவுநாட் கூட்டத்தில் தோழர்கள் வெற்பாசன், நன்மாறன், டேவிஸ் பி. ஏ., எல். டி., தேவதாஸ் ஆகியோர் பேசினர். பல அனுதாபச்செய்திகள் அறிவிக்கப்பட்டன. தோழர் அரங்கசாமி நன்றி கூற கூட்டம் முடிந்தது. இதன் நினைவாகக் 'குடி அரசு'க்கு ரூ. 1. நன்கொடை அனுப்பப்பட்டது.

ஏற்காடு திராவிடர் இயக்கத்தோழர் ஏ. குழந்தை என்ற 25வயது வாலிபர் இயற்கை எய்தினதற்காக ஏற்காடு திராவிடர் கழகத்தார் தம் அனுதாபம் தெரிவித்துக்கொண்டு 'குடி அரசு'க்கு ஒரு ரூபாய் நன்கொடை அனுப்பியுள்ளனர்.

பழுத்த வைதிகராயிருந்து பின்னர் பெரியார் கொள்கையில் பற்றுமிகுந்து, பட்டை நாமத்தை ஒழித்து சென்ற நான்கு ஆண்டுகளாகச் சீர்திருத்தக்காரராயிருந்த திருப்பாப்புலியூர், சஞ்சீவிராயுடு தெரு, தோழர் வெங்கடசாமி இயற்கை எய்தினமைக்காக அவ்வூர் திராவிட கழகத்தார் தம் அனுதாபம் தெரிவிக்கின்றனர்.

அவலூர்பேட்டை திராவிடர் கழகத் தலைவர் தோழர் ப. கோபால் அவர்கள் தந்தையும், சிறப் பகுத்தறிவு வாதியுமான தோழர் கே. பக்கையன் அவர்கள் தம் 72-வது வயதில் இயற்கை எய்தினமைக்காக வருந்தி வையூர் திராவிடர் கழகத்தார் தம் அனுதாபம் தெரிவிக்கின்றனர்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42 Cutchery street, Erode.